## இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரி - 2018

---

### 1.1 அபிப்பிராயம்

இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டவாக்கத்தின் 17(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகக் கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின்

தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 119(அ) பிரிவின் பிரகாரம், நிறுவகத்தினால் தேறிய சொத்துக்கள் கூற்றில் தேறிய சொத்துக்கள் கூறுகளுக்குரிய அளவு வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கல்லூரியால் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு அக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிலிருந்து சரியாக சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய இயலளவு அபிவிருத்திக்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 3,246,685 கூட்டுத்தொகையான மீண்டெழும் தன்மையிலான மூலதன மானியம், நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாக சீராக்கம் செய்வதற்குப் பதிலாக சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலதன மானியம் அப்பெறுமதியால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும் | மீண்டெழும் தன்மையிலான மூலதன மானியம், இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 7,964,770 ஆக இருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் அம்மீதி ரூபா 5,627,032 ஆக இருந்தமையால் ரூபா 2,337,738 ஆன வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும | பேரேட்டுக் கணக்குகள் சரியாக பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 714,000 தொகையான நிலையான வைப்புக்கள் காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும | சரியான வகைப்படுத்திலின் கீழ் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு உரிய கணக்கு மீதிகளில் ஏதேனும் பிழைகள் இருந்தால் அப்பிழைகளை சீர்செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்பு பதிவுகளை இடுவதன் மூலம் சீராக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நாட்குறிப்பு பதிவுகளை இடாமல் ஆரம்ப மீதிகளை மாற்றி பேரேட்டில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும | அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்பு பதிவுகளை இடுவதன் மூலம் மாத்திரம் தவறுகள் சீராக்கப்பட வேண்டும். |

### 1.5.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய தொழில்சார் தகைமை (NVQ) 5.6 மட்டத்திலான டிப்ளோமா கற்கை நெறியை நடாத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட இக் கல்லூரியால் அப்பாடநெறிகளுக்குரிய வெளி விரிவுரையாளர்களுக்கும் நேர்முகப் பரிசோதனை குழுவிற்கும் கட்டணங்களை கொடுப்பனவு செய்யும் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) 07 கற்கை நெறிக்கென வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் ரூபா 4,928,200 கொடுப்பனவு செய்திருந்தது. | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சினதும் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினதும் அங்கீகாரத்துடன் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | முறையான அங்கீகாரத்தின் பேரிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களுக்கு படிகள் மற்றும் ஏனைய நிதி உதவிகள் கொடுப்பனவிற்காக அமைச்சரவையின், பொது நிர்வாக அமைச்சின் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் கல்லூரியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் விடைத்தாள்களை மதிப்பிடல், பரீட்சைக் கடமைகளுக்கான கொடுப்பனவு மற்றும் வினாத்தாள்களைத் தயாரித்தல் என்பவற்றிற்கு மீளாய்வாண்டில் ரூபா 1,743,550 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மாணவர் அனுமதிக்காக நடாத்தப்பட்ட பரீட்சை கடமைகளுக்காக கல்லூரியின் நிர்வாக சபை அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டது. அவ்வாறே பாடநெறிகளுக்கு நடாத்தப்பட்ட பரீட்சை மற்றும் வினாப் பத்திரங்களை தயாரித்தல் என்பவற்றுக்கான கொடுப்பனவிற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,100,694 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 8,511,970 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 9,612,664 ஆன அதிகரிப்பொன்றாக இருந்தது. மீளாய்வாண்டின் போது மொத்த செயற்பாட்டு செலவினம் ரூபா 13,090,905 ஆல் அதிகரித்திருந்த போதிலும் மொத்த வருமானம் ரூபா 22,703,569 ஆல் அதிகரித்திருந்தமை இதற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| கல்லூரி இயங்கும் 03 றூட், 3.9 பேர்ச் அளவிலான காணியின் சட்டபூர்வ உரித்தை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் கல்லூரி சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | கல்லூரி இயங்கும் காணியின் சட்டபூர்வ உரித்தை கல்லூரிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணியின் உரித்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வெளியிடப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் ஆண்டில் நடாத்தப்பட்ட 03 பரீட்சைகளுக்குரிய 39 பாடங்களில் சித்தியடைதல் சதவீதம் 0 முதல் 56 வரையான வீச்சில் காணப்பட்டது. | மாணவர்களின் பெறுபேறுகளை அதிகரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. | மாணவர்களின் பெறுபேறுகள் குறைவடைவதற்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டியுள்ளது. |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் திறன்கள் துறைசார் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,354,801 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் கணக்காய்வு திகதியான 2019 சனவரி 01 வரை விளைவற்றுக் காணப்பட்டன. | ஆய்வுகூட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதும் மேற்படி உபகரணங்களையும் ஏனைய உபகரணங்களையும் மிகவும் செயற்திறனாக பயன்படுத்தவதற்கு முடியுமாக இருக்கும். | வளங்களை உயர் செயற்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முகாமைத்தவ உதவியாளர் உத்தியோகத்தர்களுக்காக வினைத்திறமைகான் தடைப் பரீட்சை நடாத்துவது தொடர்பாக 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்துறை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட 2013 மே 21 ஆந் திகதிய ஆட்சேர்ப்பு நடைமுறை கோவையின் 4.4.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு ஆண்டிற்கு ஒரு முறை அல்லது தேவைப்பாட்டின் பிரகாரம் பரீட்சைகளை நடாத்துவது முகாமைத்துவ சபையின் பொறுப்பாக இருந்த போதிலும் | 2018 யூலை 02 ஆந் திகதி வினைத்திறமை தடை காண் பரீட்சைக்கு தொடர்புபடுத்தப்பட வேண்டிய சகல உத்தியோகத்தர்களும் தொடர்பு படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களின் பரிந்துரைகளை செயற்படுத்தி அதற்காக தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக நிர்வாகசபை அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டின் பிரகாரம் வினைத்திறமை தடைகாண் பரீட்சைகளை நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கல்லூரியின் முகாமைத்துவ ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பொருத்தமன வினைத்திறமை தடைகாண் பரீட்சை நடாத்துவதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2014 சனவரி 22 ஆந் திகதிய DMS/1670 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கடிதத்தின் பிரகாரம் கல்லூரிக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பதவியணியினராக பதிவாளர், நிதியாளர், நூலகர் ஆகிய பதவி ஒன்று வீதம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் கல்லூரிக்காக அங்கீகரிக்கப்படாத உதவி நிதியாளர் மற்றும் உதவி நூலகர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ்வாறான பதவிகள் கல்லூரிக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | உதவி நிதியாளர், உதவி நூலகர் ஆகிய பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டின் மே 11 ஆந் திகதி தகவல் தொழில்நுட்ப மதியுரையாளர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் கல்லூரிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், ஆட்சேர்ப்பு நடைமுறை அல்லது தொழில்சார் பல்கலைக்கழகத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை கோவையில் அவ்வாறான பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாததன் காரணமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் தகைமைகளை உறுதிப்படுத்தவதற்கு கணக்காய்விற்கு முடியாதிருந்தது. | தகவல் தொழில்நுட்ப மதியுரையாளர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி U-AST வகையின் பிரகாரம் இணைந்த வகையான ஆட்சேர்ப்பு நடைமுறையான ஆசிரியர் உதவியாளர் வகுதியின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இப்பதவி பல்கலைக்கழக கல்லூரியின் ஆரம்பத்தில் இருந்தே இதற்கு இணங்கும் வகையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அனைத்து பல்கலைக்கழக கல்லூரிகளின் மூலம் இதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிர்ணயிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கல்லூரியால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக ஆகக் குறைந்தது. 02 விரிவுரையாளர் வீதம் இருக்க வேண்டிய போதிலும் 03 பாடநெறிகளுக்காக 03 விரிவுரையாளர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | உணவுத் தொழில்நுட்ப கற்கை நெறிக்கு 02 விரிவுரையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன் ஒரு விரிவுரையாளர் வெளிநாட்டில் கல்வியை கற்று வருவதுடன் மற்றைய பாடநெறியான தொலைக்காட்சி பின் தயாரிப்பு பாடநெறிக்கான விரிவுரையாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க முகாமைத்துவ சபை அங்கீகாரம் பெறப்பட்டு தொழில்சார் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.<br>அலாங்காரவியல் பாடநெறிக்காக மாணவர்கள் குறைந்த அளவில் காணப்பட்டதால் 2019 ஆம் ஆண்டின் பாடநெறி ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் சேவை புரிந்த விரிவுரையாளரும் சேவையிலிருந்து 2019-01-31 ஆந் திகதி முதல் விலகி சென்றுள்ளார் இதற்கான ஆட்சேர்ப்பிற்காக பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |